REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

தேசீய மயமாக்கப்பட்ட விமானப் போக்குவரத்து

ரூ. ஐந்தரை கோடி நஷ்டஈடு வழங்கப்படுகிறது

இந்திய சிவில் விமானப் போக்குவரத்தை தேசீயமயமாக்கியதின் விளைவாக, அந்த போக்குவரத்தை நடத்திவந்த நிறுவன உரிமையாளர்களுக்கு சுமார் ரூ. ஐந்தரை கோடி வரையில் நஷ்டஈடு தரப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: ஐப்பசி 18உ வெள்ளி (4—11—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 19உ சனி (5—11—55) [இதழ் 122

காங்கிரஸ் ஆட்சியில் ஜனநாயகம் படும்பாடு!

தடையுத்தரவு மந்திரிகள் பேசும் கூட்டங்களைப் பாதிக்காதாம்!

பெரம்பூர் வேலைநிறுத்தத்திற்கு நகர் முழுவதும் தடையுத்தரவு ஏன்?

சென்னை, நவ. 4—

காங்கிரஸ் ஆளவந்தார்கள் தாங்கள் அமுல் செய்வதாகக் கூறும் ஜனநாயகத்திற்கு எத்துணை மதிப்புத் தருகிறார்கள் என்பதற்குப் பல சம்பவங்களை நாடு கண்டிருக்கிறது.

இப்போது ஜனநாயகம் துச்சமென மதிக்கப்படும் நிகழ்ச்சி ஒன்று, காங்கிரஸ் ஆளவந்தாரால் செயல்படுத்தப்படுவதை எடுத்துக்காட்டுகிற வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

சென்னை பெரம்பூர் பக்கிங்ஹாம்-கர்னாடிக் ஆலைத் தொழிலாளர்கள், தங்களின் கோரிக்கைகள் சிலவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக, இன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வதெனவும், அதனாலும் பலன் கிட்டாவிட்டால், வரும் 19-ந் தேதி முதல் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதெனவும் முடிவு செய்து அறிவித்திருந்தனர்.

இதனைப் புகலிடமாகக் கொண்டு, நகர் முழுதும் கூட்டங்களோ, ஊர்வலங்களோ நடத்தக்கூடாதென நகர போலீஸ் 'கமிஷனர்' தடையுத்தரவு ஒன்றை நகர போலீஸ் சட்டம் 41-வது பிரிவின்கீழ் பிறப்பித்திருக்கிறார்.

பெரம்பூரில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட வேலை நிறுத்தத்தினால் நகரம் முழுவதிலுமுள்ள மக்களின் அமைதியும், பாதுகாப்பும் குலையும் என்று போலீஸ் அதிகாரி கருதி, தடை உத்தரவு பிறப்பித்திருப்பதே வியப்பிற்குரியது; ஆனால், அந்தத் தடை உத்தரவின் மூலம் ஜனநாயகம் கேலி செய்யப்படுகிறது என்பதை அதன் விதிகள் விளக்குகின்றன.

தடையுத்தரவினால் பாதிக்கப்பட மாட்டாத நிகழ்ச்சிகளின் பட்டியல் தரப்பட்டிருக்கிறது. உதவி போலீஸ் கமிஷனர்களால் அனுமதி வழங்கப்பட்ட கூட்டங்கள், மத சம்பந்தமான கூட்டங்கள், விளையாட்டினைக் காணுவதற்காகக் கூடும் கூட்டங்கள், திருமணம், சாவு இவற்றை ஒட்டி நடைபெறும் ஊர்வலங்கள், மத சம்பந்தமான ஊர்வலங்கள் இவை எல்லாம் தடையுத்தரவினால் பாதிக்கப்பட மாட்டாது.

இவை மட்டுமா? குடியரசுத் தலைவர், கவர்னர், மத்திய, மாநில சர்க்கார் மந்திரிகள் இவர்கள் எல்லாம் கலந்துகொள்ளும் ஊர்வலங்களும், கூட்டங்களும்கூட தடையுத்தரவினால் பாதிக்கப்படாதாம்!

சர்க்கார் ஜனநாயகத்தை என்ன பாடுபடுத்துகிறார்கள் என்பதற்கு, மந்திரிகள் முதலானோருக்கு மட்டும் தடையுத்தரவிலிருந்து விலக்களிப்பது போதுமான சான்றாக இல்லையா?

★

இஸ்ரேல்-எகிப்து நாடுகளிடை போர்!

சினாய் பாலைவனப் பகுதியில் கடும் தாக்குதல்

உலகெங்கும் கவலை

கெய்ரோ, நவ. 3—

இஸ்ரேலுக்கும்—எகிப்திற்குமிடையே இன்று போர் மூண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இராணுவ சூனியப் பகுதியான யெல் ஔஜா பகுதியில் உள்ள சினாய் பாலைவனத்தில் இரு நாட்டுத் துருப்புகளுக்குமிடையே கடும்போர் நடைபெற்றதாம்.

1948-ம் ஆண்டு ஏற்பட்ட உடன்பாட்டிற்குப் பிறகு இன்றுதான், இரு நாடுகளும் மிக உக்கிரமான போரில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

இஸ்ரேலியர்கள், எகிப்தியருக்குச் சொந்தமான சாபா பகுதியைத் தாக்கியதாகவும், அதை ஒட்டி இரு முறைகள் தாக்குதல்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதாயும் தெரியவருகிறது.

எகிப்தியர், இரண்டாவது தாக்குதலின்போது, தங்களது சாபா பகுதியை மீட்டுக்கொண்டதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

எகிப்தியரில் கொல்லப்பட்டோர், காயம்பட்டோர் 70 பேர் என்றும், இஸ்ரேலியரில் 200 பேர்கள் என்றும் எகிப்திய தரப்பில் தகவல் தரப்படுகிறது.

இராணுவ சூனியப் பிரதேசமாக்கப்பட்ட பகுதியில் எட்டாண்டுகளுக்கு முன் எகிப்தியர் ஆக்கிரமிப்பு செய்து, தொடர்ந்து தங்கள் ஆதிக்கத்திலேயே சில வட்டங்களை வைத்திருக்கின்றனர். அவர்களை அங்கிருந்து காலி செய்யுமாறு கோரியும் அவர்கள் மறுத்துவிடவே, அவர்கள்மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

இங்குள்ள ஐ. நா. போர் நிறுத்த ஒப்பந்த மேற்பார்வையாளர் குழுவைச் சேர்ந்த அதிகாரி, சம்பவம் குறித்து, தாங்கள் ஏதும் தெரிவிப்பதற்கில்லை என்றும், ஏனெனில் அந்தப் பகுதியில் தாங்கள் சுதந்திரமுடன் உலவுவதற்கு — நடமாடுவதற்கு இஸ்ரேல் அதிகாரிகள் அனுமதி மறுத்துவிட்டதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இப்படி வளர்ந்துள்ள நிலைகள் உலகெங்கணுமுள்ள மக்களுக்கும், அரசியல் வாதிகளுக்கும் கவலையைத் தந்திருக்கிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையைக் கூட்டி சண்டையை நிறுத்த முயற்சிப்பதா என்பது குறித்து பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் நாட்டுப் பிரதிநிதிகள், ஐ. நா. பொதுச் செயலாளருடன் பேசி வருகின்றனராம்.

பர்மா - ரஷ்யா ஒப்பந்தம்

அரிசி தந்து - தொழில் நுணுக்க உதவிபெற ஏற்பாடு

மாஸ்கோ, நவ. 3—

"பர்மாவில் உபரியாக உள்ள அரிசியைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக தொழில் நுணுக்க உதவி தர முன்வந்த முதல் பெரும் வல்லரசு ரஷ்யாதான்,"

என்று, பர்மியப் பிரதமர் யூ-நு இங்கு தெரிவித்திருக்கிறார்.

"இதே முறையில் பேரம் நடத்த அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட இதர நாடுகளிடத்திலும் பர்மா முயன்று வருகிறது. தொழில் நுணுக்க உதவியை எந்த நாட்டிலிருந்தும் இலவசமாகப் பெற பர்மா தயாராயில்லை என்பதால், உபரியாக உள்ள அரிசியைத் தந்து அந்த உதவி பெற பர்மா எண்ணுகிறது," என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

முன்னாள் பிரெஞ்சுத் திட்டுக்கள்

பிரதமர் பாரே விளக்கம்

பாரிஸ், நவ. 3—

இந்தியாவில் பிரெஞ்சுக்காரருக்கு இருந்த திட்டுக்கள் சிலவற்றை தான் விட்டுக் கொடுத்துவிட்டதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு தேசீய சட்டசபையில் பிரதமர் எட்கார் பாரே பதிலளிக்கையில், அதற்கு தான் பொறுப்பல்ல என்றும், தனக்கு முன்பிருந்த மந்திரி சபையின் காலத்திலேயே பிரெஞ்சுத் திட்டுக்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன என்றும் பதில் தந்திருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"கோவா நிலை வேறு—புதுவை நிலை வேறு; இந்தியாவில் பிரெஞ்சுக்காரருக்கு 5 நகரங்கள் மட்டுமே உரியனவாயிருந்தன; கோவா அப்படி அல்ல; தொடர்பான ஒரு சிறு நிலப் பகுதியாக கோவா விளங்குகிறது; அங்கு இராணுவதளம் அமைத்துக்கொள்ள வாய்ப்பு உள்ளது; ஆனால், பிரெஞ்சு நகரங்களில் இராணுவம் வைத்துக்கொள்ள நாம் ஒருபோதும் அனுமதிக்கப்பட்டதில்லை."

அடையாள வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு

சென்னை, நவ 4—

இன்று பக்கிங்காம்-கர்னாடிக் ஆலைத் தொழிலாளர்கள் மேற்கொள்ளுவதாயிருந்த ஒரு நாள் 'அடையாள வேலை நிறுத்தம்' ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மாநில தொழிலாளர் நல இலாகா மந்திரி எம். பக்தவத்சலம், தொழிற் சங்கத் தலைவரைச் சந்தித்து, பேச்சுவார்த்தைகளுக்கு இன்னும் வாய்ப்பிருப்பதாக அறிவித்ததின் பேரில் 'அடையாள வேலை நிறுத்தம்' ஒத்திவைக்கப்பட்டிருப்பதாயும், ஆனால் வரும் 19-ந் தேதிக்குள் தொழிலாளரின் கோரிக்கைகள் கவனிக்கப்படாவிட்டால், ஏற்கனவே அறிவித்தபடி, வரும் நவ. 19-ந் தேதி முதல் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் தொழிலாளர்கள் ஈடுபடுவர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'சீக்கியரின் வாழ்வு-தாழ்வுப் போராட்டம்'

பஞ்சாபி மொழிவழி மாநிலம் பற்றி மாஸ்டர் தாராசிங் விளக்கம்

அமிர்தசரஸ், நவ. 2—

"பஞ்சாபி மொழிவழி மாநிலம் அமைப்பது என்பது, 'சீக்கியர்களுக்கு வாழ்வா—மரணமா'—என்ற போராட்டமாகும்; அந்த மாநில அமைப்புக்காக அகாலிதளம் எத்தனை தியாகங்கள் புரிந்தேனும் பாடுபடும்.

"பஞ்சாபி மொழிவழி மாநிலம் அமைப்பதை எதிர்க்கிற இந்துக்களும், இந்திய சர்க்காரும், நிலையின் நெருக்கடித் தன்மையை உணர்ந்து, பஞ்சாபி மாநிலம் அமைய ஒப்புதல் தரவேண்டும்.

"மாநிலப் புது அமைப்பு, மொழிவழி அடிப்படையில் அமையவில்லை என்பது அர்த்தமற்ற வாதமாகும்; பஞ்சாபி மொழிவழி நீங்கலாக, அரசியல் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள ஏனைய 13 மொழிகளுக்கும் ஒவ்வொரு மாநிலம் அமைய சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது,"

என்று, அகாலிதளத் தலைவர் மாஸ்டர் தாராசிங், கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சிரியா-துருக்கி எல்லையில் இராணுவத்தினர் மோதல்

டமாஸ்கஸ், நவ. 3—

சிரியா—துருக்கி எல்லையில் உள்ள இரு நாடுகளையும் சேர்ந்த ஆயுதந்தரித்த பாதுகாப்புப் படையினர் நேற்று இருமுறை மோதிக்கொண்டதாயும், ஒரு மணி நேரம் நீடித்த அந்த மோதுதல்களின் விளைவாக எவரும் சேதப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

துருக்கியப் பாதுகாப்புப் படையினர் ஞாயிறன்றும், செவ்வாயன்றும், சிரியா எல்லைக்குள் 600 கெஜ தூரம் வரை நுழைந்ததாயும், அதன் விளைவாகவே இந்த மோதுதல்கள் ஏற்பட்டதாயும் கூறப்படுகிறது.

தொழிலாளருக்குக் கூலி உயர்வு

சென்னை, நவ 4—

சென்னை துறைமுகத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும்—'துறைமுக டிரஸ்டு' நிர்வாகிகளுக்குமிடையில், தொழிலாளர்களின் கோரிக்கைகள் பற்றிய தகராறில் சமரச முடிவு ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

சில நாட்களுக்கு முன்பு, துறைமுகத் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வெளியிட்டு, அவை நிறைவேற்றப்படாவிட்டால் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக அறிவித்திருந்தது நினைவிலிருக்கலாம்.

மத்திய சர்க்கார் அதிகாரி தலையிட்டு, இந்த சுமுக முடிவுக்கு வழி செய்தார். இதன்படி, தொழிலாளர்களுக்கு சராசரியாக மாதச் சம்பளத்தில் ரூ. 15 வரை அதிகம் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 4—11—'55 வெள்ளி

ஆரம்பக் கல்வி

'எதிர்காலத்தில் உருவாக்க விரும்பும் ஒரு சமுதாயம் எத்தன்மைத்தாய் இருக்க விழைகிறதோ அத்தன்மையை மனதில்கொண்டு, நீண்டகாலப் பெருநோக்குடன் அத்தகு சமுதாயத்தை உருவாக்குவதற்கு உதவக்கூடியதாக அந்தச் சமுதாயத்தில் அங்கம் பெறவிருக்கும் குழந்தைகளுக்கு போதிக்கப்படும் கல்வி இருக்க வேண்டும்.'

'இப்போதுள்ள தலைமுறைச் சமுதாயத்தின் உருவாக்கத்திற்கு, அது பெற்றுவந்த கல்வி முறை எத்துணை உதவிற்று என்ற அனுபவத்தையும், எதிர்காலத்தில் சமைக்க விரும்பும் சமுதாயம்போல நிகழ் காலத்தில் உலகில் வேறெங்கேனும் சமுதாயப் பிரிவுகள் இருப்பின் அது பெற்றுவரும் கல்வி முறையையும் மனதில் கொண்டுதான் கல்வி முறைகள் வகுக்கப்பட வேண்டும்' என்பது, பொதுவாகக் கல்வி குறித்த நிபுணர்களின் கருத்தாக இருந்து வருகிறது.

அதிலும், ஆரம்பக் கல்வி என்பது, அந்தக் கல்வியைப் பெறுவோர் எதிர்காலத்தில் பெறவேண்டிய விடுதலையோடு கூடிய நிரந்தரமான நல்வாழ்விற்கான அடிப்படை அறிவைப் பயிற்றுவிக்கக்கூடியதாக அமைய வேண்டுவது அவசியம்; உயரிய நல்லொழுக்கமும், சீரிய குணநலன்களும், சமுதாயக் கூட்டுறவு, மொழி, நாடு இவற்றின் நலனில் மிகுந்த பற்றும், வீரமும் தீரமும் கொண்ட குடிமக்களாக குழந்தைகளை வளர்ப்பதற்கு, அவர்களுக்குத் தரப்படும் கல்வியே துணை செய்ய வேண்டும் என்றும் கல்வி நிபுணர்களும், நாட்டுப் பற்றுக் கொண்டோரும் கருதுவதை எவரும் தவறுடையது என எளிதில் தள்ளிவிட முடியாது.

இந்தக் கருத்துக்களை எல்லாம் கணக்கிலெடுத்துக்கொள்ளாமல் நடைமுறையிலிருக்கிற கல்வி முறையை, அது எவ்வளவு பெரிய குறைபாடுகளை உடையதாயிருப்பினும் திருத்தவோ, நீக்கிவிட்டு வேறொன்றைப் புகுத்த நினைக்கவோ முற்படுவது அறிவுடைமையாகாது.

நடைமுறைக் கல்வியின்மீது, தகுதியுடையோராலும், தகுதியற்றோராலும் சுமத்தப்படுகிற சில பொதுவான குற்றச்சாட்டுக்களைப் புகலிடமாகக் கொண்டு, ஆச்சாரியார் பதவியிலிருந்த காலத்தில் ஆரம்பக் கல்வி முறையில் மேற்கொண்ட மாறுதல்களும், அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புகளும், அதன் பயனாய் அவர் பதவியிலிருந்தே துரத்தப்பட்டதும், புது மந்திரி சபை அமைந்ததும், ஆச்சாரியார் திட்டம் திரும்பப் பெறப்பட்டது, மீண்டும் பழைய முறையே அமுல் செய்யப்பட்டுவருவதும் எல்லோரும் அறிந்தவையே!

அதன் பிறகு இப்போது நடைமுறையிலிருந்து வரும் ஆரம்பக் கல்வி குறித்து ஆய்ந்து கருத்தறிவிக்குமாறு சென்னை சர்க்காரால், டாக்டர் அழகப்பா தலைமையில் நியமிக்கப்பட்டிருந்த ஆய்வுக் குழு தனது அறிக்கையை அண்மையில் வெளியிட்டிருக்கிறது.

"இன்றைய உலகத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள ஆரம்பக் கல்விப் பயிற்சி பொதுக் கல்வியாக இருக்க வேண்டும்; அதேபோது, மேல் படிப்புக்கான வாய்ப்பும், ஆற்றலுமுடையோருக்கு போதுமான வசதி செய்வதாய் இருக்கவேண்டும்; குழந்தையின் எல்லாத் திறமைகளையும் வளர்ப்பதே கல்வியின் குறிக்கோளாய் இருக்கவேண்டும்" என்று, குழுவினர் ஆரம்பக் கல்வி குறித்து அறிக்கையில் தந்திருக்கும் விளக்கம், பொதுவாக ஒப்புக்கொள்ளக்கூடியது என்பதில் நமக்குச் சந்தேகம் இல்லை. டாக்டர் அழகப்பா குழுவினர் ஆரம்பக் கல்வி குறித்து மேலும் வெளியிட்டுள்ள கருத்துக்களில் சில ஏற்கத் தக்கதும், சில ஒதுக்கத் தக்கதுமாக அமைந்திருக்கின்றன.

'ஆரம்பக் கல்வியின் குறிக்கோளாக இருக்க வேண்டியவை' என்ற தலைப்பில், அவர்கள் தந்துள்ளவற்றில் பதினைந்து அம்சங்கள் பொதுவான வரவேற்பிற்கு உரியனவாகும்:—

1. தாய்மொழியில் நல்ல தேர்ச்சி, இலக்கியத்தில் போதுமான பயிற்சி, கணக்கில் நியாயமான அளவு திறமை; 2. இயற்கையோடு தொடர்புடைய எல்லாப் பகுதிகளின் உண்மைகளும் நியதிகளும் குறித்த அறிவு — குறிப்பாக வாழ்வு நலம் பற்றிய கோட்பாடுகள்; 3. வரலாற்றுப் பண்பாட்டுப் பரம்பரை பற்றிய அறிவு—பொதுவாக மனித இனத்தின் செயற்கரிய செயல்கள்; 4. அறிவைச் செலுத்தும் முயற்சிகளில் பற்று; 5. உடல் வளர்ச்சி நலம்; 6. தூய வாழ்வு நலப் பழக்கங்கள் (தன் வாழ்வு மட்டுமின்றி பொது வாழ்வு நலமுங்கூட); 7. நன்னடத்தை, பிறரோடு அன்பாகப் பழகுதல்; 8. முறைப்படி செயலாற்றும் பழக்கம்; 9. தொல்லைகளைப் பொருட்படுத்தாது எடுத்த காரியத்தை நிறைவேற்றும் விடாமுயற்சி; 10. கட்டுப்பாடாகவும், ஒழுங்குடனும் நடந்துகொள்ளுதல்; 11. பிறருக்கு உதவி புரிதல், தன்னலம் கருதாமை; 12. ஒத்துழைப்பு; 13. நாணயம்; 14. கைகளையும், கண்களையும் உரிய முறையில் பயன்படுத்துதல்; 15. தேவையானபோது உடலுழைப்பில் ஈடுபட உறுதி கொண்ட போக்கு-ஆகியவைதான் அந்த அம்சங்களாகும்.

இந்த அம்சங்கள் முழுவதையும் ஒரு ஆரம்பக் கல்வி மாணவன் நிறைவேற்ற தரப்பட்டிருக்கும் ஐந்தாண்டுக் கால அவகாசம் போதுமானதல்ல வென்றும், அதை எட்டு ஆண்டுக் காலமாக உயர்த்தப்படவேண்டும் என்றும், அதோடு தொடர்புடைய சில குறித்தும், ஆய்வுக் குழுவினர் தெரிவித்துள்ள கருத்துக்களை வரவேற்பதில் பொதுவாகக் கருத்து வேற்றுமை இருக்க நியாயமில்லை.

குழுவினரின் இதர கருத்துக்களைப் பின்னர் ஆராய்வோம்.

மாநில மாநாட்டின் முக்கியத்துவம்!

குடந்தையில் அண்ணா விளக்கம்

"திருச்சியில் கூடவிருக்கும் தி. மு. கழக மாநில மாநாடு, இயக்கத்திற்கோர் திருப்புமுனையாக அமையும். இம்மாநாட்டில் வகுக்கப்பெறும் திட்டங்கள் காரணமாக, எங்களை ஆட்சியினர் அடக்க முற்படலாம்; ஆனால், எதையும் தாங்கும் இதயத்துடன் செயலில் இறங்கியுள்ள எங்களை எந்த அடக்கு முறையும் ஒன்றும் செய்துவிட முடியாது.

"தற்போது, மொழிவழிப் பிரிவினை குறித்து பெரும் அளவில் பேசப்பட்டுவருகிறது. வெள்ளையர் கையாண்ட 'பிரித்தாளும் கொள்கை'யையே, இப்பொழுதுள்ள ஆட்சியினரும் கையாளுகின்றனர் என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்; ஆட்சியினர், மாநிலத்திற்கு மாநிலம் பூசலை மூட்டிவிட்டனர்; தேவிகுளம், பீர்மேடு, மற்றும் இரண்டு குறு வட்டங்களை, மலையாளத்துடன் சேர்க்க எவ்வகையிலும் நியாயமில்லை. தேவிகுளத்தில் ஏராளமான சொத்துக்கள் உள்ள பணிக்கர், தேவிகுளம் தமிழ்நாட்டில் இருக்க எப்படி சம்மதிப்பார்? மொழிவழி மாநில அமைப்பு, எவ்வகையிலும் திராவிட நாடு குறிக்கோளுக்கு முரண்பட்டதல்ல.

"திராவிட நாடு ஒரு தனித்த ஆட்சியென நாங்கள் எக்காலத்தும் கூறியதில்லை. மொழிவழி அமைந்துள்ள தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நான்கு நாடுகளும், இனவழி ஒன்றுபட்டு அமைக்கும் ஒரு கூட்டாட்சியாகவே திராவிட நாட்டமைப்பை நாங்கள் குறிப்பிட்டுவந்துள்ளோம்.

"இந்தியப் பிரதமர் நேரு, தனது தமிழ்நாட்டுச் சுற்றுப்பயணத்தின் இறுதியில் வேலூரில் பேசுகையில், 'இந்தியா பிளவுபட நான் சம்மதிக்கமாட்டேன்' எனக் குறிப்பிட்டார். இதில் ஆணவம்தான் காணப்பெறுகிறதேயன்றி, அரசியல் அறிவு சிறிதும் காணப்பெறவில்லை.

"தமிழ்நாட்டு கண்ணகி தன் வழக்கை பாண்டியனிடம் எடுத்துரைத்தாள். குற்றத்தை உணர்ந்த பாண்டியன் உயிர்நீத்தான்; நாமும் நம் வழக்கை டில்லி நோக்கி எடுத்துரைக்கிறோம்; ஆயினும் பாண்டியனின் பெருந்தன்மையை நேருவிடம் நாம் காணுவதற்கில்லை. எனினும், பொதுமக்களின் எண்ணம் நம் கருத்தின்பால் இயைந்து வளர வளர, நம் வழக்கு வெற்றி பெற்றே தீரும்.

"நம் நாட்டிற்கு நேரு தலைவராய் இருக்க முடியாது. ரஷ்ய நாட்டுப் பிரதமர் மார்ஷல் புல்கானின் விரைவில் நம் நாட்டிற்கு வரவிருக்கிறார். அவருக்கு நாம் அளிக்கும் பெருமையெல்லாம், அவர் வேறொரு நாட்டின் தலைவர் என்ற காரணத்திற்காகவேதான். இங்கு வரும் புல்கானின் நமது அன்பைப் பார்த்துவிட்டு, நம்மிடமுள்ள கோலார் தங்கவயலைக் கேட்டால் நாம் கொடுக்கச் சம்மதிப்போமா? புல்கானினை மதிப்பதைப்போலவேதான், நம்மைப் பொறுத்தவரை, நேருவையும் மதிக்கிறோம்—போற்றுகிறோம்; ஆயினும், அவர் நமக்குத் தலைவராயிருத்தல் முடியாது. நம் மண்ணில் பிறந்த ஒருவரே நமக்குத் தலைவராய் இருக்க முடியும்."

—இவ்வாறு, 30—10—55 மாலை, கும்பகோணம் அரண்மனைத் தோட்டத் திடலில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில், தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

அண்ணா அவர்கள் தொடர்ந்து குறிப்பிட்டதாவது:—

"மாற்றுக் கட்சியாரெல்லாம், 'திராவிட முன்னேற்றக் கழகம் அடுத்துவரும் பொதுத் தேர்தலில் கலந்துகொள்ளுமா?'—என்று சிந்திக்கும் அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்துள்ளது; காங்கிரசார் நாட்டை ஆளும் அரசினர்; அவர்கள் நம்முடைய இயக்கத்தைக் கூர்ந்து கவனிக்கின்றனர்.

"மாநில மாநாட்டில் அடுத்த பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் கலந்துகொள்வது பற்றி முடிவு செய்வோம். மாநாட்டில் 3 இலட்சம் மக்கள் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கிறோம்.

"பொருள், உழைப்பு எல்லாவற்றையும் நாங்கள் கேட்டவுடன் கொடுக்கும் மக்கள் பெருங்கூட்டம், மாநில மாநாட்டில், பொதுத் தேர்தலில் கலந்துகொள்வது குறித்து தங்கள் கருத்துக்களை எங்களுக்கு வாரி வழங்குவார்கள் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

"நாங்கள், பொதுத் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டும்—அல்லது, கூடாது'—என்னும் பொருள் குறித்து எல்லோரும் தங்கள் கருத்தைத் தெரிவிக்க மாநில மாநாட்டில் இடமளிப்போம். ஆனால், எனது கருத்து என்ன என்பதை நான் கூறமாட்டேன் என நான் உறுதி கூறுகிறேன்; காரணம் என் கருத்தையொட்டி மக்கள் கருத்தும் திரும்பிவிடலாம் என்னும் அச்சமே!

"இருதரப்பிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பெற்ற பின்னர், மக்களின் எண்ணத்தை வாக்கெடுப்பின் மீது அறியப்பட்டு அதன்படியே முடிவு செய்யப்படும்.

"'பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் கலந்துகொள்ளல் வேண்டும்'—'பொதுத் தேர்தலில் தி.மு. கழகம் கலந்து கொள்ளல் கூடாது' என எழுதப்பட்ட இரண்டு பெட்டிகள் வைக்கப்படும்; மக்கள், அவர்களிடம் கொடுக்கப்படும் வாக்குச் சீட்டை, தங்களுக்குப் பிடித்தமான பெட்டியில் போட்டு, தங்கள் கருத்தை—எண்ணத்தைத் தெரிவிக்கவேண்டும். இவ்வாக்கெடுப்பின் முடிவின் படியே, மாநில மாநாட்டின் முடிவும் அமையும்."

ஆப்கனுக்கும்

அமெரிக்க ஆயுத உதவி?

வாஷிங்டன், நவ 2—

இங்குள்ள ஆப்கன் தூதுவராலயம், காபூரிலிருந்து செக்கோஸ்லோவேகியாவிற்கு ஒரு ஆயுதக்குழு செல்வதாயும், அங்கு இரண்டாம் யுத்தத்திற்கு முன் வாங்கப்பட்ட ஆயுதங்களின் பழுதடைந்த பாகங்களைப் புதுப்பிப்பதற்கான உபகரணங்களைக் கொள்முதல் செய்வர் என்றும் தெரிவித்திருக்கிறது.

இதற்கிடையில், அமெரிக்க அரசாங்க இலாகா குறிப்பு ஒன்றில், ஆப்கன் தூதுவர் அமெரிக்காவுடன் ஆயுதக் கொள்முதல் பற்றி விவாதித்ததாகவும், ஆனல் ஆயுத உதவி வேண்டுமென்று குறிப்பான கோரிக்கை எழுப்பப்படவில்லை என்றும் தெரிவிக்கிறது.

தடை கிடையாதாம்!

சென்னை, நவ. 2—

சிறுவர் குற்றப் பள்ளியின் முன்னாள் நபர்கள், சர்க்கார் வேலைக்கு இலாயக்கற்றவர்களாகக் கருதப்படமாட்டார்கள்; போதிய யோக்யதாம்சம் இருந்தால், அவர்களை சர்க்கார் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளுவதற்கு சென்னை சர்க்கார் முடிவு செய்துள்ளது.

'க்ஷயரோகத்தை தடுப்பதற்கு

நல்ல சாதனம்!'

'பி. சி. ஜி. ஊசி போடுகையில் கவனமுடன் இருக்கவேண்டும்'

அந்நிய நிபுணர் கூறுகிறார்

சென்னை, நவ. 2—

"க்ஷயரோகத்தைத் தடுப்பதற்கு பி. சி. ஜி ஊசி குத்தப்படுவது ஒரு நல்ல சாதனமாகும்; ஆனல், அம்மருந்து விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டதா என்பதை முன்கூட்டியே தெரிந்து கொள்ள வேண்டும். அந்த மருந்து தயாரிக்கப்படும் இடத்தில் சரியான மேற்பார்வை இருப்பது அவசியமாகும்,"

என்று, இந்தியாவுக்கு வருகை தந்துள்ள அயல்நாட்டு டாக்டர்கள் குழுவில் உள்ளவரும், சுவிட்சர்லாந்தில் பல ஆண்டு காலமாக டாக்டராக இருந்தவருமான வால்டர் ஆம்ஸ்டெட் பத்திரிகை நிருபர்களிடையே கூறிவிட்டு, மேலும் சொன்னார்:—

"பி. சி ஜி ஊசியைப் பிரயோகிக்கையில மிகவும் உன்னிப்பாக இருக்கவேண்டும். சதையை ஒட்டி குத்தவேண்டுமே தவிர, நரம்பில் ஊசியைப் போடக்கூடாது; தேக திடமுள்ள சிறுவர்களுக்கே ஊசி போட வேண்டும்."

பண்டிதர் அச்சம்?

எல்லாக் கட்சியினரையும் திருப்திப்படுத்த முடியாதாம்!

"மாநில சீரமைப்புக் குழுவின் அறிக்கையை நிதானமாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்; அறிக்கையினல், மக்கள், கிளர்ச்சியை மேற்கொண்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் நான் எதையும் கூற விரும்பவில்லை. ஆனல், எல்லாக் கட்சியினரையும் திருப்திப்படுத்துவதற்கு இயலாது என்பதை மட்டும் கூற விரும்புகிறேன்,"

என்று, பண்டித நேரு, ராஜ்கோட்டில் கூறியுள்ளார்

சூரிய ஒளியினல் இயங்கும்

புதுவகை ரேடியோ!

வெயிலிலிருந்து பெறுகின்ற சக்தியினலேயே இயங்கும் ஒருவித புது ரேடியோவை சிகாகோ ரேடியோ உற்பத்தி நிறுவனம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறதாம்.

இந்த ரேடியோ ஆயுட்காலம் முழுதும் உழைக்கும் என்றும், இது மிகவும் திருப்திகரமாக வேலை செய்வதாகவும் அக்கம்பெனி அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த ரேடியோ செட்டின் மீது சூரிய பாட்டரி ஒன்று உள்ளது. சூரிய வெளிச்சமோ, அல்லது 100 'வாட்' மின்சார சக்தி கொண்ட 'பல்பின்' ஒளி பட்டாலோ அது வேலை செய்யத் தொடங்குகிறதாம்.

வெயில் இல்லாத சமயத்திலும், மின்சாரம் இல்லாதபோதும் ரேடியோவை இயக்க மற்றொரு பாட்டரியும் அந்த 'செட்'டில் உள்ளது. இந்த பாட்டரி, இழந்த மின்சார சக்தியை வெயில் பட்டால் மீண்டும் பெறுறுவிடுகிறதாம்!

தென்னாட்டில் தோன்றிய முதல் உர உற்பத்தித் தொழிற்சாலை

வடநாட்டுத் தொழிற்சாலைகளுக்கு உதவுவதற்கு எஞ்சினீயர்களைப் பயிற்றுவிக்கும் இடமாக அமையுமா?

ஆல்வாய் (திரு-கொச்சி)—

இங்கே பெரியாற்றின் கரை ஓரத்தில் எழுபது ஏக்கர் நிலப் பரப்பில் இந்தியாவில் முதன் முதலாகத் தோன்றிய உர உற்பத்தித் தொழிற்சாலையைக் காணலாம்.

பெர்ட்டிலைஸர் அண்டு கெமிக்கல்ஸ், திருவாங்கூர் லிமிடெட்— என்பது அதன் பெயர்.

இந்தத் தொழிற்சாலையில் 600 வகையான இயந்திரங்கள் உண்டு இதுபோன்ற தொழிற்சாலைகள் இந்தியாவில் பல இடங்களிலும் உருவாகின்றன என்பது உண்மைதான்; எனினும், இந்த ஆல்வாய்த் தொழிற்சாலையின் சிறப்புக்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

ஆல்வாய்த் தொழிற்சாலை 1948-லேயே தோன்றிவிட்டது; அன்று முதல் இன்றுவரை அங்கிருந்து இரண்டு இலட்சம் டன் உரங்கள் விவசாயிகளுக்குக் கிடைத்துள்ளன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதன் சிறப்பு இன்னும் பெருகும்; இத்தொழிற்சாலையில் இன்று செய்வதுபோல் இன்னுமொரு மடங்கு அதிகமாக அம்மோனிய உரங்கள் செய்வதற்கு அந்தத் திட்டத்தில் இடமிருக்கிறது.

ஆல்வாய்த் தொழிற்சாலையில், முதலில் திட்டமிட்ட அமோனியம் சல்பேட்டுடன் இன்று, அமோனியா, சல்பூரிக் ஆசிட், சூப்பர் பாஸ்பேட், கார்பன் டையாக்சைடு, அமோனியம் குளோரைடு ஆகிய பொருள்களும் வெளிவருகின்றன.

'வீட்டின் அருகேயுள்ள எருக்கிடங்கு உரங்களைக் காட்டிலும் இரசாயன உரங்கள் சிறந்தவை' என்று விவசாயிக்குக் காட்டும் வேலையையும் இந்த ஆல்வாய்த் தொழிற்சாலை மேற்கொண்டிருக்கிறது. இதற்கென இரசாயன உரம் வைத்துக் காட்டும் விளைநிலங்கள் உள்ளன; விவசாயிகளுக்கு நல்ல ஆலோசனை கூறவும் அவர்கள் பிரச்சினைகளில் உண்மையான அக்கரை கொள்ளவும் இத்திட்டம் வழி வகுத்துள்ளது.

ஆல்வாய்த் தொழிற்சாலையின் வெற்றிக்கு ஒரு காரணம், வீணாகும் இளைப் பொருள்களையும் பயனாகும் பொருள்களாக மாற்றும் அதன் இரகசியமாகும். இவ்வாறு, கார்பன் டையாக்சைடு வீணாகாதபடி சேமிக்கப்படுகிறது; இது, பொருள்களைப் புட்டிகளில் அடைத்தல், சோடா முதலிய பானங்கள் தயாரித்தல் இத்தகைய தொழில்களுக்குப் பயன் படுகிறது.

கார்பன் டையாக்சைடைப் போல் தார், கால்சியம் கார்பனேட், மரத் தூள் முதலியனவும் ஆல்வாய்த் தொழிற்சாலையில் கிடைக்கின்றன.

இத் தொழிற்சாலைக்கு ஒரு பெரிய ஆராய்ச்சிக்கூடமும் நான்கு சிறிய ஆராய்ச்சிக்கூடங்களும் உள்ளன பள்ளிவாசல் மின்சார உற்பத்தி நிலையத்திலிருந்து மின்சாரம் கிடைக்கிறது. தொழிற்சாலை தனக்குவேண்டிய தண்ணீரைப் பெரியாற்றிலிருந்து எடுத்துக் கொள்கிறது.

திருவாங்கூர்-கொச்சி, சென்னை அரசாங்கங்களும், மத்திய அரசாங்கமும் ஆதரவளிக்க, தனியார் முதல்போட்டு ஆரம்பித்த இந்த ஆல்வாய்த் தொழிற்சாலையில் 1,500 பேர்களுக்கு மேல் வேலை செய்கிறார்கள். இவர்களுக்குப் பல வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள் தக்க டாக்டர்களும், மற்றவர்களுமுள்ள மருத்துவமனை, சிற்றுண்டிச்சாலை இவையும், 125 குடும்பங்களுக்கு மேல் வாழும் நகரும் அமைந்து விளங்குகின்றன.

இன்னும், பொழுது போக்குவதற்கு வசதியான ஓர் இடம், வேலை பார்ப்போரின் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம், வேலை பார்ப்போரின் வீட்டுக்குப் பொதுவாக வேண்டியவற்றை வாங்குவதற்கு ஒரு கூட்டுறவுக் கடை இவையும் உள்ளன. தொழிற்சாலை எல்லைக்கு வெளியேயிருந்து வேலைக்கு வருவோருக்குப் போக்குவரத்து வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற தொழிலாளருக்கும், பயிற்சியற்ற தொழிலாளருக்கும் பிராவிடண்ட் நிதி, லீவு முதலிய வசதிகள் உண்டு.

பிரம்மாண்டமான சிந்திரி உரத் தொழிற்சாலை போன்ற இடங்களுக்கு வேண்டிய உரத் தொழில் எஞ்சினீயர்களைப் பயிற்றுவிப்பதற்கும் நல்லதோர் இடமாக இந்த ஆல்வாய் தொழிற்சாலை விளங்குகிறது.

ரூ. 18 கோடி செலவில் 2,10,000 ஏகருக்குப் பாசன வசதி திட்டங்கள்

'லட்சியப் பணி'களை எஞ்சினீயர் விளக்குகிறார்

சென்னை, நவ. 3—

சர்க்கார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2,10,000 ஏக்கருக்குப் பாசன வசதியளிக்கக்கூடிய ரூ. 18 கோடி மதிப்புள்ள திட்டங்களை அமுல் நடத்துவரென்றும், இதனால் 40,000 டன் அதிக உணவுப் பொருட்கள் உற்பத்தியாகுமென்றும் சென்னை சர்க்கார் இலாகா முதன்மை எஞ்சினீயர் கூறியிருக்கிறார்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 2,20,00 ஏக்கருக்குப் பாசன வசதி அளிக்கும் ரூ. 22 கோடி மதிப்புள்ள திட்டங்களால், 44,580 டன் அதிக உணவுப் பொருள் உற்பத்தி செய்யப்பட்டது என்றும், இத்திட்டங்களில் பல அமுலாக்கப்பட்டுவிட்டதுடன், மற்றும் சில முடியும் தருவாயில் இருக்கின்றன என்றும் கூறினார்.

இரண்டாவது திட்ட காலத்தில் சிறு பாசன திட்டங்களுக்காக ரூ. 250 இலட்சமும், ஏரிகளில் தூர் எடுப்பதற்காக ரூ 50 இலட்சமும் செலவழிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் இரண்டாவது திட்டத்தில் சென்னை பக்கிங்காம் கால்வாயை துறைமுகத்துடன் இணைத்து கால்வாயையும் ஆழப்படுத்துவதற்கு ரூ. 50 இலட்சம் செலவழிக்கப்படுமென்றும், புதுச்சேரிக்கும், சென்னைக்கும் பலனளிக்கும் வராக நதி—வீடூர் தேக்கத் திட்டத்திற்கு, இரண்டாவது திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், இத்திட்டம் இன்னும் ஒரு ஆண்டிற்குள்ளாகவே மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

ரூ 3 கோடி செலவில் புள்ளம்பாடி திட்டம், புது கட்டளைக் கால்வாய் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்றும், இதனால் 3000 ஏகருக்குப் பாசன வசதி கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

இவ்வளவு திட்டங்களையும் எடுத்துக்கொண்ட போதிலுங்கூட மாநிலத்தின் சில பாகங்களில் குறிப்பாக தென் ஆற்காடு, வட ஆற்காடு, கோயமுத்தூர் மாநிலங்களின் சில கிராமங்களில் கடுமையான தண்ணீர் பஞ்சம் இருக்கத்தான் செய்யும் என்றும், அக்குறைபாடுகளை, மைசூர், ஆந்திரா, திருவாங்கூர்-கொச்சி மாநிலங்களின் உதவியால்தான் தீர்க்க முடியும் என்றும், அவர் கருத்தறிவித்துள்ளார்.

அண்ணாதுரை நிகழ்ச்சிகள்

★

பெயர் சூட்டல்

விழுப்புரம் குமரன் தியேட்டரில் 31—10—55 மாலை 5-மணிக்கு திருவண்ணாமலை கிளை எஸ். ஆர். எம் யூ செயலாளர் தோழர் சி. குப்புசாமி அவர்கள் பெண் குழந்தைக்கு அண்ணா அவர்கள் 'தமிழ்ச் செல்வி' என்று பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப் பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

★

திருமணம்

விழுப்புரம் குமரன் தியேட்டரில் 31—10—55 மாலை 5-30-மணிக்கு, அண்ணா அவர்கள் தலைமையில், ஒத்திவாக்கம் ஸ்டேஷன் மாஸ்டரும், செங்கற்பட்டு கிளை எஸ். ஆர். எம். யூ தலைவருமான தோழர் கே. இராமச்சந்திரன் அவர்கட்கும் சென்னை ஆசிரியை தோழியர் எஸ். அனுசூயா அவர்கட்கும் வாழ்க்கை ஒப்பந்தம் சிறப்பாக நடைபெற்றது. தென்பகுதி ரயில்வேமென் யூனியன் தலைவர் தோழர் சீ. இராகவானந்தம் அவர்கள் யாவரையும் வரவேற்றுப் பேசினார். தோழர்கள் கே. ஏ. மதியழகன், அ. பொன்னம்பலனார் ஆகியவர்கள் மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்கள். மணமக்கட்குப் பல தோழர்களால் வாழ்த்து இதழ்களும், நூல்களும் பரிசு தரப்பட்டது. தலைவர் முடிவுரையில், சீர்திருத்தத் திருமணத்தின் அவசியத்தையும், பகுத்தறிவுக் கொள்கைகளை மணமக்கள் பின்பற்றி வாழ்க்கையை இனிது அன்புடன்—ஒற்றுமையுடன் நடத்தி எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்பெய்தி வாழவேண்டுமென்றும் வாழ்த்துரை கூறி, மணமக்களைப் பாராட்டினார்கள். தோழர் சீ. இராகவானந்தம் நன்றி கூறினார்.

★

வரவேற்பு

31—10—55 மாலை 6 மணிக்கு. தென்னாற்காடு மாவட்டம் வளவனூர் தி. மு கழகம் கிளைத் தோழர்கள் அண்ணா அவர்களுக்கு மலர் மாலைகள் சூட்டி வரவேற்புப் பத்திரம் ஒன்றைப் படித்துக் கொடுத்தனர். அண்ணா அவர்கள் தி. மு கழகக் கொடியை ஏற்றிவைத்து நன்றி கூறினார்.

★

கிளைக் கழகத் துவக்கவிழா

அன்று மாலை தென்னாற்காடு மாவட்டம் சிறுவந்தாடு கிராமத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா தோழர் இரா. சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அ. பொன்னம்பலனார், கே. ஏ மதியழகன் அண்ணா ஆகியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளையும், காங்கிரஸ் ஆட்சியில் ஏற்பட்ட கேடுகளையும், சமூக அரசியல், பொருளாதாரக் கொள்கைகளையும் விளக்கிப் பேசினார்கள். தோழர் அ. பொன்னம்பலனார் தி. மு. கழகக் கொடியை உயர்த்தினார். அண்ணா அவர்கட்குப் பல கிளைகள் சார்பிலும், சிறுவந்தாடு தி. மு. கழகச் சார்பிலும் மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் வழங்கப்பட்டன.

* * *

மாநில மாநாட்டுக்கு நிதி

சிறுவந்தாடு தி. மு கழகச் சார்பில்	ரூ. 101—0—0
வளவனூர் திரு. அறிவழகன்	ரூ 1—1—0
பஞ்சமாதேவி திரு. ஜி. ரத்தினவேலு	ரூ. 3—0—3
சின்னகல்லிப்பட்டு திரு. ஜி. சண்முகம்	ரூ 1—0—8
பட்டாம்பாக்கம் தி மு. கழகத் தோழர்கள்	ரூ. 5—0—0

ஆக ரூ 111—1—6; தொகை மாநில மாநாட்டு நிதிக்காக அண்ணா அவர்களிடம் கொடுக்கப்பட்டது. இரவு 10-30 மணிக்குக் 'கட்டப் பொம்மன்' நாடகம் தோழர்களால் நடத்தப்பட்டது.

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

மருத்துவம், ரொக்க உதவிகள் பற்றி விளக்கம்

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின்படி தொழிலாளர்களுக்கு மருத்துவ உதவி, நோய்க் கால உதவி, பிரசவ கால உதவி, எதிர்பாராதபடி வேலை செய்யும் சக்தியற்றோருக்கு உதவி, தொழிலாளரை நம்பிப் பிழைக்கும் நெருங்கிய உறவினர்கட்கு உதவி ஆகிய ஐந்து வகைப்பட்ட உதவிகள் கிடைக்கும்.

மருத்துவ உதவி இன்ஷ்யூரன்ஸ் செய்துகொண்டுள்ள தொழிலாளர்களுக்கு, 'இலவச சிகிச்சை முறை'யில் உதவி செய்யப்படுகிறது.

இதர உதவிகள் யாவும் ரொக்கப் பண உதவியாக அளிக்கப்படுகின்றன.

இந்த உதவிகள் ஒருவருக்குச் செய்யப்படுவதற்கெனச் சில நிபந்தனைகளும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

மாநில சர்க்கார்களின் பொறுப்புக்குட்பட்டதாம்!

இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, 'சுகாதாரம்' மாநில சர்க்கார்களின் பொறுப்புக்கு உட்பட்ட ஒன்றாகிறதாம். ஆகையினால் மருத்துவ உதவிகளுக்கு மாநில சர்க்கார்கள் ஏற்பாடு செய்கின்றனர் என்றாலும் மருத்துவ உதவிக்காகும் செலவு முழுவதையும் மாநில சர்க்கார்களே ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்றும், இதில் பெரும் பகுதியை, தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் கொடுத்துவிடுகிறது என்றும் கூறப்படுகிறது.

விலை உயர்ந்த மருந்துகள் இனாம்?

இன்ஷ்யூர் செய்துள்ளவர்களுக்கு சிகிச்சை தரப்படும் மருத்துவ மனைகளில், சாதாரணமாகக் குறைந்த சம்பளக்காரர்களுக்கும் 'சல்பா' போன்ற பலவித விலை உயர்ந்த மருந்துகளும் இனாமாகவே கொடுக்கப்படுகிறதாம்!

நோய்க் காலத்தில்.........

இன்ஷ்யூர் செய்துகொண்ட தொழிலாளி நோய்வாய்ப்பட்டால், அவர் வேலை செய்ய முடியாத காலம் வரைக்கும் (ஒரு வருட கால வரையறைக்குள்—அதிகமாக 56-நாட்களுக்கு) அவர், தமது தினக் கூலியில் பாதிக்குமேல்—அதாவது 12 பகுதியில் 7 பங்குத் தொகையினை நகர சபையிடமிருந்து பெறுவாராம்.

இரண்டு ஆண்டுகள் வேலை செய்துள்ளவர்களுக்கும், மற்றும் வேறு சில கட்டண நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களுக்கும், அவர்கள் க்ஷயரோகத்தால் பீடிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டால், நோய்க் கால ரொக்க உதவி, மேற்கொண்டு 18 வாரங்களுக்கு சாதாரண நோய்க் கால ரொக்க உதவிக்கான விகிதத்தில் பாதி அளவில்—அல்லது தினமொன்றுக்கு 12 அணா விகிதத்தில் நீடிக்கப்படுமாம்.

பிரசவகால உதவி

இன்ஷ்யூர் செய்து கொண்டுள்ள ஒரு பெண் தொழிலாளி கர்ப்ப காலத்திலும், அதற்குப் பின்னரும் இத்திட்டத்தின் ரொக்க உதவி ஏற்பாட்டின்படி, நோய்க் கால பண உதவி விகிதத்தில், அல்லது நாளொன்றுக்கு 12 அணா வீதமோ ரொக்க சகாயம் பெற உரிமையுடையவராவார். இந்த உதவி 12 வாரங்களுக்குக் கொடுக்கப்படுமாம்.

12 வார காலம் இந்த உதவி பெற்ற பின்னரும், இன்ஷ்யூர் செய்து கொண்டுள்ள ஒரு பெண் ஏதோ ஒரு வியாதி காரணமாக வேலைக்குத் திரும்ப முடியாது போனால், அப்பெண் நோய்வாய்ப் படும் கால ரொக்க உதவியையும் பெற்றுக் கொள்ளலாமாம்.

எதிர்பாராத நஷ்டங்களுக்கு நிவாரணம்

வேலையின்போது திடீரென காயம் ஏற்பட்டு வேலை செய்யும் திறன் இழந்தவராகவோ, அல்லது அவர் இறந்தோ விடுவாரானால், அந்த நஷ்டங்களுக்கெல்லாம் தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம் நிவாரண ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிறது.

இவ்வாறு வேலையின்போது இறந்துபோகிற ஒருவரது விதவைக்கு, ஆயுள்காலம் வரைக்கும், அல்லது அவர் மறுமணம் புரியும் வரைக்கும் இறந்துபோன தொழிலாளரின் தினசரி சம்பள விகிதத்தில் பத்தில் மூன்று பங்கு வீதம் ரொக்க உதவியாகக் கொடுத்துவரப்படும். இறந்தவருக்கு ஒரு மனைவிக்கு மேற்பட்டிருந்தால், இத்தொகை விதவை மனைவியர்களுக்குச் சரிசமமாகப் பங்கிட்டுக்கொடுக்கப்படும். ஒவ்வொரு மகனுக்கும், மணமாகாத பெண்ணுக்கும் 15 வயது வரை, இறந்துபோனவரின் தினசரி சராசரி சம்பளத்தில் ஐந்தில் ஒரு பங்கு வீதம் ரொக்க உதவி கொடுக்கப்பட்டு வரும் மகனோ, மகளோ தொடர்ந்து கல்வி பயின்று வந்தால், இந்த உதவி, அவர்களுக்கு தங்களது 18-வது வயதுவரை கொடுக்கப்படும்.

கோரிக்கைகளைக் கவனிக்க........

இன்ஷ்யூர் செய்துகொண்டுள்ள தொழிலாளர்களின் ரொக்க உதவி கோரிக்கைகளைக் கவனிப்பதற்காக தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கும் இடங்களில், அங்கங்கே காரியாலயங்கள் பல ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

'மகளிர் நிலை உயர சமூகப் புரட்சி தேவை'

பண்டித நேரு விளக்கம்

"நாட்டில், மகளிர் நிலைமை உயருவதற்கு சமூகப் புரட்சி தேவை; இன்றுள்ள சட்ட முறைகளை வகுத்த ஆண்களே தான், மகளிர் துயரங்களுக்குப் பொறுப்பாளிகளாகும்,"

என்று, பிரதமர் நேரு, ஜாம் நகரில், கால்கோல் விழா ஒன்றில் கூறிவிட்டு, மக்கள் சபை முன்புள்ள சில சட்டங்களுக்கு எதிராகக் காணப்படும் எதிர்ப்புகளைக் குறிப்பிட்டு, 'மதம், சாத்திரம் என்று காரணம் காட்டி இச்சட்டங்களை எதிர்ப்பது இக்காலத்திற்குப் பொருந்தாததாகும்," என்று குறிப்பிட்டார்.

பஸ் போக்குவரத்தை

தேசிய மயமாக்கும் திட்டம்

நிதி உதவி பெற நிபந்தனை

புதுடில்லி, நவ. 2—

"சாலைப் போக்குவரத்து 'கார்ப்பரேஷன்'கள் நிறுவுவதற்கு ஒப்புக் கொள்வதைப் பொறுத்துத்தான், மாநில சர்க்கார்கள், மத்திய சர்க்காரிடம் தங்கள் பஸ்போக்குவரத்தை தேசிய மயமாக்கும் திட்டத்திற்கான நிதி உதவி பெற முடியும்," என்று, எல்லா மாநில சர்க்கார்களுக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தியாவில், 1954-ல் இரண்டாவது கால் வருடத்தில் மொத்தம் 63,800 மின்சார விசிறிகள் உற்பத்தி செய்யப்பட்டன; 1955ம் ஆண்டில் இதற்குச் சரியான கால் வருடத்தில் உற்பத்தியான மின்சார விசிறிகளின் மொத்த எண்ணிக்கை 76,700 ஆகும்.

ஆலய நுழைவுச் சட்டத்தை ஒழிக்க பார்ப்பனர் முயற்சி தோல்வி

வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பு

"1947-ம் வருடத்திய சென்னை ஆலய நுழைவுச் சட்டம் செல்லத் தக்கதாகும்; அது, அரசியல் சட்டத்திற்கு முரணானது அல்ல; அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நோக்கத்தை அது நிறைவேற்றுகிறது,"

என்று, சென்னை உயர் நீதிமன்ற பிரதம நீதிபதி பி. வி. இராஜமன்னாரும், நீதிபதி ஏ. எஸ் பி. அய்யரும் தீர்ப்பளித்தனர்.

'திருவையாற்றுக்கு அருகில் வரகூரிலுள்ள வெங்கடேசப் பெருமாள் கோயில் தனிப் பட்டவர்களுடைய கோயிலாகும்; அது பிராமணர்களுக்காகவென்று நிர்மாணிக்கப்பட்டது; அதற்காகப் பிராமணர்களே பணம் செலவழித்தார்கள்; சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே, அக்கோயில் அவர்களுக்கென்றே ஏற்பட்டது,"

என்று குறிப்பிட்டு, 'இக்கோயிலுக்குள் நுழையக் கூடாதென்று திரு. நாராயண பிள்ளைக்கும், மற்றும் இருவருக்கும், நிரந்தரமாகத் தடை விதிக்கவேண்டும், என்றும் கோரி, வி. எஸ். இராமநாத அய்யர் என்பவரும், மற்றும் இருவரும் திருவையாறு மாவட்ட முன்சீப் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்தனர்.

முன்னைய வழக்கில் நடந்ததென்ன ?

'இக்கோயில் எல்லாஇந்துக்களுக்கும் பொதுவானது என்று அறிவிக்கப்பட வேண்டும்'—என்று 1922-ம் ஆண்டில், பிரதிவாதிகளால் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது; ஆனால் அக்காலத்தில் கோயில் நுழைவுச் சட்டம் போன்றவை இல்லையாதலால், கீழ்க்கோர்ட்டில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, உயர்நீதி மன்றத்திலும் கீழ்க்கோர்ட் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது.

பிரதிவாதிகள் வாதம்

நடப்பு வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில், இந்தக் கோயில் பிராமணர்களின் வழிபாட்டிற்கு என்று ஏற்பட்டிருந்தாலும், அது, பொதுக் கோயில் என்றே உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்திருப்பதாயும், ஆலய நுழைவுச் சட்டம் இயற்றப்பட்ட பின்பு, கோயிலில் நுழைவதற்கான தடை நீங்கி விட்டதென்றும், ஆகவே, குறிப்பிட்ட இக்கோயிலுக்குள் நுழைவதற்கு தங்களுக்கும் பாத்தியதை உண்டென்றும் விவாதிக்கப்பட்டது.

முன்சீப் கோர்ட் விசாரணையின் போது, இந்த வழக்கில், 'கோயில் நுழைவுச் சட்டம் இந்திய அரசியலில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிரானதா? —சட்டத்திற்கு முரணானதா ?— செல்லுபடியாகாதா ?' — என்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறு உயர்நீதி மன்றத்தாரைக் கேட்டுக் கொண்டார்.

நீதிபதிகள் தீர்ப்பு

உயர் நீதிமன்ற நீதிபதிகள் இது சம்பந்தமாக தீர்ப்பு கூறுகையில் குறிப்பிட்டதாவது :—

"அரசியல் சட்டம் 3-வது அத்தியாயம் (மக்கள் அடிப்படை உரிமை பற்றிய பிரிவு) எந்த விதிகளுக்காவது முரணானது என்று வாதிகளின் வழக்கறிஞர்கள் எங்களுக்கு திருப்தியுற எடுத்துக் காட்ட இயலவில்லை; அரசியல் சட்டம் எதைக் கருத்து விளக்கமாக அனுமதித்துள்ளதோ அதைத்தான் சென்னை கோயில் நுழைவுச் சட்டம் செய்திருக்கிறது; எனவே, இந்தச் சட்டம் அரசியல் சட்டத்தின் எந்த பகுதிகளுக்கும் முரணானது அல்ல; சட்ட விரோதமானதும் அல்ல; செய்யத்தக்கதேயாகும்"

சென்னை—ஆந்திரா எல்லைத் தகராறு

இரு மாநில மந்திரிகள் பேச்சுவார்த்தை

சென்னை, நவ. 3—

சென்னை—ஆந்திர எல்லையில் தகராறுக்குள்ளான பகுதிகளின் எதிர்காலம் குறித்து நிர்ணயிப்பதற்காக இன்று இரு மாநிலத்தையும் சேர்ந்த முதன் மந்திரிகள், மந்திரிகள் சிலர்கூடி சென்னை சர்க்கார் அலுவலகத்தில் பேச்சு வார்த்தை நடத்தினர்.

இருதரப்பினரும் சிக்கலுக்கான தங்கள் தங்கள் பரிகாரம் பற்றிய திட்டங்களைத் தாக்கல் செய்து பூர்வாங்கப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு, கூட்டத்தைத் தொடர்ந்து மறு நாள் நடத்துவதென முடிவு செய்திருக்கின்றனர்.

சிக்கலுக்கு ஒரு சுமுகமான முடிவு ஏற்படும் என்றே இருதரப்பினரும் வழக்கம்போல நம்புகின்றனர். தங்கள் நம்பிக்கைக்கு ஆதாரமாக, இன்று பேச்சுவார்த்தைகள் சுமுகமாக நடைபெற்றதை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

நதி நீர்ப் பங்கீடு சம்பந்தமாக புதியதோர் இடைக்கால ஒப்பந்தத்தில் இந்தியாவும்—பாகிஸ்தானும் கையெழுத்திட்டுள்ளன. அக். 1-ந் தேதியிலிருந்து 1956 மார்ச் 31-ந் தேதிவரையில் இந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும்.

தபால் ஊழியரிடை அண்ணாதுரை

அகில இந்திய தபால் இலாகா மூன்றும் பிரிவு ஊழியர் சங்கத்தின் தந்திப் பயிற்சி வகுப்புப் பிரிவின் 2-வது ஆண்டு மாநாடு சென்னை பிராட்வே, 149 எண்ணுள்ள கட்டிடத்தில் 5—11—55 மாலை 5 மணி அளவில் நடைபெறும். தோழர் எம். ஏ. ஜப்பார் தலைமை தாங்குவார்.

தோழர் சி. என். அண்ணாதுரை மாநாட்டைத் துவக்கி வைப்பார்.

திருவொற்றியூரில் அண்ணாதுரை

★

5—11—55 மாலை 6 மணிக்கு, சென்னை-திருவொற்றியூர் சன்னதித் தெருவில், தி.மு.கழகப் பொதுக்கூட்டம், தோழர் ஏ. வி. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணாதுரை, டி. சண்முகம் எம்.எல்.ஏ., மாசிலாமணி ஆகியோர் பேசுவர்.

கூட்டத்தில், திருவொற்றியூர் தி. மு. கழகச் சார்பிலும், தொழிலாளர் சார்பிலும், அண்ணா அவர்களிடம் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

தமிழ் நாடு நகராண்மை கழக உறுப்பினர்கள் மாநாடு

நவம்பர் திங்கள் முதல் வாரத்தில், திருச்சியில் மேற்படி மாநாடு நடைபெறும் என்றும், அம்மாநாட்டில் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், திருக்குறள் வி. முனுசாமி, எஸ் முத்து, ப. உ. சண்முகம் ஆகியோர் கலந்துகொள்வதாகவும், உறுப்பினர்கள் அனைவரின் வருகையையும், ஆலோசனைகளையும் விரும்புவதாகவும் மேற்படி மாநாட்டு வரவேற்புக் குழு நிர்வாகிகள் அறிவித்திருக்கின்றனர்.

தென்னாப்பிரிக்காவின் இனவேற்றுமைக் கொள்கை

ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளும், தென் அமெரிக்க நாடுகளும், தென்னாப்பிரிக்காவின் இனவேற்றுமைக் கொள்கை பற்றிய பிரச்சினையை மீண்டும் ஐ. நா. சபைக்குக் கொண்டுவருவதற்கு முயற்சிக்கின்றனவாம். அச்சட்டத்தின் 'வேக'த்தைத் தணிப்பதுதான் இம்முயற்சியின் நோக்கமெனக் கூறப்பட்டுள்ளது.

'அராபியருடன் பேச்சு நடத்துவதற்குத் தயார்'

இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

ஜெருசலேம் நவ. 2—

இஸ்ரேல் நாட்டுப் பிரதமரான டேவிட் பென் குரியன் என்பார் தான் எகிப்திய நாட்டுப் பிரதமரையும், இதர அராபிய நாட்டு ஆட்சியாளர்களையும் சந்தித்து, முன் நிபந்தனை எதுவுமின்றி, பரஸ்பரம் சிக்கல்களுக்கு ஒரு முடிவு காணப் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராயிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

மக்கள் சபையில் தனது புதிய ஐந்து கட்சிக் கூட்டு மந்திரி சபை குறித்து அறிவித்தபோது, அவர், தனது இந்த விருப்பத்தை வெளியிட்டிருக்கிறார்.

"நேரடியாக ஒரு ஒப்பந்தத்திற்கு அராபிய நாட்டவர் தயாராக இப்போது இல்லாவிடின், இரு சாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சிலசிக்கல்களுக்குப்பரிகாரம் தேடுவதற்கேனும் தயாராயிருந்தால், அது எனக்குச் சம்மதமே," என்றும் குரியன் தெரிவித்திருக்கிறார்

நிராகரிப்பு!

லண்டன், நவ 3—

இஸ்ரேல் பிரதமரான டேவிட் பென் குரியன் அறிவித்திருந்தபடி, சிக்கல்கள் குறித்து, பேச்சுவார்த்தைகளுக்கு அரபு நாட்டுத் தலைவர்கள் தயாராக இல்லை என்று அரபு லீகின் தற்காலிக பொதுச் செயலாளரான டாக்டர் ரெய்ப் பெல்லாமா தெரிவித்திருக்கிறார்.

முதலில் இஸ்ரேல், பாலஸ்தீனம் குறித்து ஐ நா. சபை நிறைவேற்றிய தீர்மானத்தை அமுல் செய்யவேண்டும்; குறிப்பாக, தாயகம் திரும்ப விரும்பும் அராபிய அகதிகளைத் திருப்ப அனுப்ப வேண்டும்; திரும்ப விரும்பாதவர்களுக்கு, நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தேசீய மயமாக்கப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லா நிறுவனங்களும் இந்த நஷ்டஈடுத் தொகையைப் பெற்றுக்கொள்ள ஒப்பிவிட்டதாகவும், 10 சதவிகிதம் மட்டுமே ரொக்கமாகத் தரப்படும் என்றும் எஞ்சியவை கடன் பத்திரங்களாகத் தரப்படும் என்றும் உறுதி கூறப்பட்டிருக்கிறது.

'ஏர் இந்தியா இண்டர்நேஷனல்' என்ற நிறுவனம்தான் அதிகமான நஷ்டஈடு பெறுகிறது; அந்த நிறுவனத்திற்கு ரூ 2 76 91 000 தரப்படவிருப்பதாகவும் தெரிய வருகிறது. இன்னும் பல நிறுவனங்கள் இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டஈடு பெறும்.

****

தி. மு. கழக மாநில மாநாட்டு நிதிக்காக காஞ்சியில் சிறப்புக் கூட்டம்

★

இடம் : காஞ்சி கண்ணன் டாக்கீஸ்

நாள்: 6—11—55 ஞாயிறு காலை 10 மணி

பேசுபவர் : **சி. பி. சிற்றரசு**

பொருள் : 'ஜோன் ஆப் ஆர்க்கும்-ஜூலியஸ் சீசரும்'

★

கட்டணம் : அணா 8, 4

—நகர தி. மு. கழகம், காஞ்சி

****

போளூர் (வ. ஆ.) வட்டார தி. மு. கழகச் செயலாளர்களுக்கு

"6—11—55 அன்று போளூரில் நடைபெற இருந்த மாநில மாநாட்டு நிதியளிப்புப் பொதுக்கூட்டம் சில எதிர்பாராத காரணங்களால் 20—11—55க்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அன்று மாலை தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெறும் அக்கூட்டத்தில், தோழர் மு. கருணாநிதி அவர்களிடம் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும். அது சமயம் போளூர் வட்டாரத்திலுள்ள தி. மு. (கிளைக்) கழகச் செயலாளர்கள், தங்களது மாநில மாநாட்டு நிதியின் பங்குத் தொகையை, அன்று தோழர் மு. கருணாநிதி அவர்களிடம் அளித்துவிட வேண்டுகிறேன். செயலாளர்கள் உடனடியாக நிதி வசூலில் ஈடுபட்டு வடஆற்காடு மாவட்ட தி. மு. கழகத்தின் பங்குத் தொகையை பூர்த்தி செய்ய வேண்டுகிறேன்"

என்று, வ. ஆ. மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி அறிவிக்கிறார்.

பெங்களூர் — பிளாக்பள்ளி தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு

6—11—55 காலை 10 மணிக்கு பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அறிக்கைப்படி, பிளாக் பள்ளி தி. மு கழகப் பொது உறுப்பினர் கூட்டம், கழகக் கட்டிடத்தில், தோழர் எஸ். வி. பதி தலைமையில் நடைபெறும்.

இராசிபுரம் நகர தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு

6—11—55 மாலை 3 மணிக்கு, இராசிபுரம் நகர தி. மு க. செயற்குழுக் கூட்டம், தோழர் பி சின்னண்ணன் தையற் கடையில் நடைபெறும்.

தாய்மார் கழக மாதாந்திரக் கூட்டம்

5—11—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, எண் 32, முல்லா சாயபு தெருவில், திருமயிலை. சிவமுத்து தலைமையில் நடைபெறும். திருமதி. கமலா-உலகநாதன் வரவேற்புரை வழங்குவார். திருமதிகள் பார்வதி, தாமரைக்கண்ணி, சாரதாம்பாள் ஆகியோர் பேசுவர். அவ்வமயம், குழந்தைகளின் ஆடல், பாடல் முதலியன நிகழும்.

டாக்டர் சி. நடேசன் மன்ற மனை மாற்றப் புகு விழா

6—11—55 காலை 9 மணிக்கு, சென்னை-சேப்பாக்கம், லால்பேகம் தெரு, 44-ம் எண்ணில் மனை புகு விழா, தோழியர் அலமேலு அப்பாதுரை தலைமையில் நடைபெறும் தோழர் கா. அப்பாதுரை, மற்றும் பலர் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

சத்திரப்பட்டி (ராஜபாளையம்)
நடுத்தெரு திடலில்
5—11—55 மாலை 7 மணிக்கு
தலைவர் : கே. மகாலிங்கம்
பேசுவோர்:
என். வி. நடராசன்
சி. பி. அண்ணாமலை
சு. பாலகிருட்டிணன்
த. கனகசபாபதி
மாலை 6 மணிக்கு ஊர்வலம்

★

சுந்தரம்பாண்டியம்
அண்ணா திடலில்
6—11—55 மாலை 6 மணிக்கு
பேசுபவர் :
என். வி. நடராசன்

★

திருவத்திபுரம்
பெரியார் மைதானத்தில்
6—11—55 ஞாயிறு மாலை
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
காஞ்சி கல்யாணசுந்தரம்
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி
ஈ. சரவணன்
சி. வி. சுப்பராயன்
வி. குட்டியப்பன்

சொற் பயிற்சிக் கூட்டம்

6—11—55 காலை 10 மணிக்கு, சென்னை 16-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில், தோழர் ஜே ஓ. பாண்டியன் தலைமையில் நடைபெறும். 'உறுப்பினரும்—கடமையும்' எனும் பொருள் பற்றி தோழர் கோ. செங்குட்டுவன், மற்றும் பலர் பேசுவர்.

பாராட்டுக் கூட்டம்

5—11—55 அன்று, வட சென்னை குறள் நெறிக் கழகச் சார்பில், சென்னை 3-வது வட்ட நகரசபை உறுப்பினர் தோழர் க. கணேசனுக்குப் பாராட்டுக் கூட்டம், தோழர் டி வி. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

வேலாயுதம் நினைவு நாள் விழா

7—11—55 மாலை 6 மணிக்கு, செயங்கொண்டசோழபுரம், காந்தி பூங்கா அருகே, தோழர் அ. மெத்துசலா தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. கே. திராவிட மணி, லா. ந. இராமலிங்கம், கோ. சிவபெருமாள், அ. சலாம் ஆகியோர் பேசுவர்.

திருமணம்

7—11—55 காலை 5 மணிக்கு, புதுவை - தென்னண்டைபுல்வார் 9-ம் எண்ணுள்ள இல்லத்தில், தோழர் எஸ் அஜீஸ்—தோழியர் கைருன்னிசா பேகம் திருமணம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.